[*1995 ஏப்ரல் 18*

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இறால் வளர்ப்புத் துறைக்கு சரியான தொழில் நுட்பம் மற்றும் நல்ல அணுகுமுறை, சீரிய முறையில் திட்டம் இடுதல் போன்றவற்றுடன் விளை நிலம் பாதிக்காமலும், மாசு கெடாமலும் இருக்கும் வகையில், பிரான்ஸ் நாட்டு நிறுவனம் வகுத்திருக்கும் உத்தியைப் பெற்று இறால் உற்பத்தியாளர்களுக்கு சிறப்பு பயிற்சியை அளிப்பதற்கும் சுற்றுப்புற தூய்மையை பேணி பாதுகாக்கவும் ஜியோ லைட்டுகள் அமைக்கச் செய்து, அல்லது ஸ்பிக் பைன் கெமிகல்ஸ் நிறுவனத்தினர் செயற்கையான முறையில் இந்த ஜியோ லைட்டுகளை தயாரித்து நல்ல பலனை தருகின்ற முறையை உற்பத்தியாளர்கள் கடை பிடிக்கவும் ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலிருந்து தரமான தாய் இறால் குஞ்சுகளை. சில நாடுகள் இறக்குமதி செய்து உற்பத்தியைப் பெருக்குவது போல தமிழகத்திலும் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை வெளிநாட்டிலிருந்து டெக்னாலஜியைக் கொண்டுவர வேண்டும் என்பதாகும். அப்படிப்பட்ட டெக்னாலஜியை வெளிநாட்டிலிருந்து கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடைபிடித்து வருகிற அந்த மதிநுட்பம் மற்றும் அவர்களுடைய ஆற்றலின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆராய்ச்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே உள்ளூரிலேயே தேவையான அனைத்து டெக்னாலஜியும் இருக்கிறது. தேவையானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பி.எஃப்.டி.ஏ. என்று சொல்லக் கூடிய பிராக்கிஷ் வாட்டர் பிஃஷ் பார்மர்ஸ் டெவலப்மென்ட் ஏஜன்சி என்ற நிறுவனத்தை அணுகினால் அவர்களுக்குத் தேவையான அனைத்து தொழில் நுட்பமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

322—

கிராம நிர்வாக அதிகாரிகளுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

36657*—திரு. எச்.எம். ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 18]

(அ) நீலகிரி மாவட்டத்தில் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு என அந்தந்தப் பகுதியில் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள 85 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகம் சார்ந்த குடியிருப்பு கட்ட 1993–94 பகுதி 2 திட்டத்தின் கீழ் 10 (பத்து)–ம், 1994–95–ஆம் பகுதி 2 திட்டத்தில் 5–ம் (ஐந்து) அரசால் உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் நிதிநிலைக்கேற்ப அலுவலகம் சார்ந்த குடியிருப்பு கட்டப்படும்.

323—

வெள்ளச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

*22610—திரு. **ஆ. பாலையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், வெள்ளச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் அரசு ஆவன செய்யும்.